*Chapter XXII Code of Criminal Procedure.)*

*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC.1517/2025***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-1 (LW-2)***

*Name / Father's Name:* ***திரு.சுரேஷ் த/பெ. மணி***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **06.03.2026.**

துவக்க நேரம் 01.10 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்சமயம் தலைவாசல் காவல் நிலையத்தில் முதல்நிலைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.09.2025 அன்று காலை 10.00 மணியளவில் நானும், என்னுடன் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.மணிகண்டன் என்பவரும் காவல் உதவி ஆய்வாளர் திரு.மங்கையர்க்கரசன் அவர்கள் தலைமையில், மதுவிலக்கு சம்மந்தமாக எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் தலைவாசல் காவல் நிலைய சரகம், ஊனத்தூரில் உள்ள எதிரியின் வீட்டின் அருகில் கண்காணித்து சென்றபொழுது, அங்கு ஒரு கட்டைப்பையுடன் இருந்த ஒருவர் எங்களை கண்டதும் அவரது வீட்டிற்குள் நுழைய முயற்சித்தவரை பிடித்து விசாரித்தோம்.

2) அப்போது அவர் அவரது பெயர் மணியன் த.பெ சின்னுசாமி என்று கூறினார். பின்னர் எதிரி அவர் வைத்திருந்த கட்டைப்பையிலிருந்து சுமார் 180 ML அளவுகொண்ட Black Pearl Brandy- 06 பாட்டில்களை எடுத்து ஆஜர் செய்தார். அதனால் எதிரி மணியன் என்பவரை, காவல் உதவி ஆய்வாளர் அன்றைய தினமே கைது செய்தார்.

3) பின்பு சம்பவ இடத்தில் எதிரி எடுத்து ஆஜர் செய்த Black Pearl Brandy- 06 பாட்டில்களை, அந்த இடத்தில் பொதுநபர் சாட்சிகள் யாரும் சாட்சி சொல்ல முன்வராத காரணத்தால் எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில், காவல் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2-வது கையெழுத்து என்னுடையதுதான். **(கைப்பற்றுதல் மகஜரில் உள்ள எனது 2-வது கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

4) பின்பு உயர் அதிகாரியின் உத்தரவு படி காவல் உதவி ஆய்வாளர்,

கைப்பற்றிய வழக்கு சொத்தை சம்பவயிடத்திலேயே தீ வைத்து அழித்து, எங்கள் முன்னிலையில் அழித்தல் மகஜர் தயார் செய்தார். அழித்தல் மகஜரில் உள்ள 2–வது கையெழுத்து என்னுடையது தான். (**அழித்தல் மகஜரில் உள்ள எனது 2–வது கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)

5) பிறகு எதிரியை நிலையம் அழைத்து வந்து, எதிரியின் மீது வழக்கு பதிவு செய்ய, காவல் உதவி ஆய்வாளருக்கு நானும் உதவியாக இருந்தேன். காவல் உதவி ஆய்வாளர், என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1) நான் சொல்லும் சம்பவயிடமானது மக்கள் நடமாட்டமான பகுதி என்றால் சரிதான், ஆனால் நாங்கள் செல்லும் பொழுது அந்த இடத்தில் மக்கள் யாரும் இல்லை. தனிநபர்களை இவ்வழக்கில் சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். இரசாயன பகுப்பாய்விற்காக ஏதேனும் மாதிரிகளை எடுத்து வைத்தோமா என்றால் இல்லை. என் முன்பாக சம்பவயிடத்தை காட்டக்கூடிய பார்வை மகஜரோ, மாதிரி வரைபடத்தையோ காவல் ஆய்வாளர் தயாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். கைப்பற்றியதாக சொல்லும் சாராயத்தை எங்கு அழித்தோம் என்றால் சம்பவயிடத்தில்தான் அழித்தோம்.

2) நான் சொன்னவாறு சொன்ன தேதி மற்றும் நேரத்தில், சொன்ன இடத்தில் எதிரியை பார்க்கவில்லை என்றும், எதிரியிடமிருந்து எந்த பாட்டில்களையும் கைப்பற்றவில்லை என்றும், புள்ளி விவர கணக்கிற்காக எதிரியின் மீது போடப்பட்ட பொய்யான வழக்கிற்காக, காவல் உதவி ஆய்வாளர் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றும், வழக்கு ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றும், வழக்கிற்காக சம்பவ இடத்தில் தயார் செய்யப்பட்டதாக பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 01.21 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.03.06 18:01:59 +0530

Judicial Magistrate No.2, Attur.